**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**STC No.469/2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw5/Pw4 |
| Name | : சதாசிவம் |
| Father/Husband's Name | : முத்து |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11.08.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அணைக்கட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். கடந்த 15.05.2024 ம் தேதி 17.00 மணியளவில் செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மனுதாரர் சுரேஷ் எனபவர் நிலையம் ஆஜராகி அவர் Edelweiss என்ற தனியார் நிறுவனத்தில் முகவராக புகார் கொடுத்ததின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 316/2024 பிரிவுகள் 294(b), 323 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் பவுன்ராஜ் மற்றும் ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அவை முறையே **அதசா.ஆ.4 மற்றும் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சாட்சிகள் 1-4 வரை ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம் பட்டவர்க்கு சிகிச்சை அளித்த செங்கல்பட்டு அரசு மருத்துவமனை மருத்துவர் அன்புகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் பதிவு செய்த விபத்து பதிவேடு பெற்று. அந்த விபத்து பதிவேடு **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.08.2024 ம் தேதி எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இத்துடன் என் புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேற் சொன்ன பிரிவுகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகாரை பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிக்கு தான் காயம் ஏற்பட்டுள்ளது என்றாலும், அவர் எதிர் புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதன் பேரில் விசாரணை செய்யாமல் இவ்வழக்கின் புகார் தாரர் நிறுவனம் என்பதால் மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu